00309/19 -1-

# ஆதிதிராவிடர் நலத்துறை

VC..............
R..............
D.R..............
A.R..............
S.O..............

அனுப்புநர்

இயக்குநர்,
ஆதிதிராவிடர் நலத்துறை,
சேப்பாக்கம், சென்னை 05

பெறுநர்

முதல்வர்,
இணைப்பில் கண்டுள்ளபடி,

The Tamil Nadu Dr. M.G.R. Medical University
31 DEC 2018
OP-28
CHENNAI-600 032

Dean of Students
03 JAN 2019
The Tamil Nadu Dr. M.G.R. Medical University
Chennai-32.

3 Jan 19

ந.க.எண் ஜே2 / 14845 / 2018 நாள்.26.12.2018

அய்யா / அம்மையீர்,

பொருள் ஆதிதிராவிடர் நலம் – 2018-2019 ஆம் கல்வியாண்டு – முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ/ மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் – தொடர்பாக

பார்வை
1. அரசாணை நிலை எண் 71 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 3) துறை நாள் 07.10.2013
2. அரசாணை நிலை எண் 5 ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நலத் (ஆதிந 3) துறை நாள் 29.01.2014
3. அரசுக் கடித எண் 4952/ஆதிந3/2014-1 நாள் 22.4.14
4. அரசுக் கடித எண் 12675/ஆதிந3/15-1 நாள் 07.09.15
5. அரசாணை (நிலை) எண் 58 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந3) துறை நாள் 21.09.2017

------

1. பார்வை 1 முதல் 5 வரையுள்ள அரசாணை மற்றும் அரசு கடிதங்களின்படி, 2018-2019 ஆம் கல்வியாண்டில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்க 24.12.2018 முதல் 31.01.2019 வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

2. அனைத்து மாணவர்களும் திட்டம் தொடர்பான விதிமுறைகளை அறிந்து கொள்ளவும் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கி, கல்வி ஊக்கத் தொகை வேண்டி விண்ணப்பிக்க ஏதுவாக இத்திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் விண்ணப்ப படிவங்களை ஆதிதிராவிடர்

மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான அரசு இணைய தளத்தில் ("www.tn.gov.in/forms/deptname/1") வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலும் 31.01.2019 ஆம் தேதிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனவும், **ஊக்கத் தொகைக்கான விண்ணப்பப் படிவத்தில் ஏதேனும் ஒரு கலம் பூர்த்தி செய்யப்படாமல் விடுபட்டிருந்தாலும், இதர சான்றுகள் ஏதேனும் இணைக்காமல் விடுபட்டிருந்தாலும், பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது** (விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்) என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு இவ்வலுவலகம் பொறுப்பல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது.

4. மேலும் தாங்கள் தங்களது அலுவலக விளம்பர பலகையில் மேற்படி செய்தியினை வெளியிடவும், **தங்களது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கும் மேற்படி விபரத்தினை தெரிவிக்கவும்,** தெரிவிக்கப்பட்டதற்கான ஒப்புதலை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

5 மேலும் சில கல்லூரிகள், மாணாக்கர்களிடமிருந்து விண்ணபத்தினை பெற்று, கல்லூரியிலிருந்து அனுப்புவதாக தெரிவித்து, காலம் கடந்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அவ்வாறு காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கப்பட மாட்டாது. காலம் கடந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு கல்லூரியின் முதல்வரே முழு பொறுப்பு எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறார்.

6 மாணவர்களால் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானதா எனவும், வேறு கல்வி உதவித் தொகை திட்டங்களில் இத்திட்டம் உட்பட மாணவர் பயன்பெறவில்லை என்பதை உரிது செய்திடவும் முந்தைய ஆண்டுகளில் இருவேறு திட்டங்களின் பயன் பெற்றிருக்கும் நேர்வில் குறைவான பயன் பெற்ற திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொகை மாணவரால் திருப்பி செலுத்தப்பட்டு அதற்குரிய செலுத்துச் சீட்டு நகல் இணைக்கப்பட்டுள்ளதா போன்ற விபரங்கள் அனைத்தையும் கல்லூரி முதல்வர் பரிசீலனை செய்து விண்ணப்பங்களை பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

26.12.18

ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநருக்காக

6/20

26/12/18